©
தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 1.60 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரப்பூர்வாக வெளியிடப்பட்டது

எண். 369] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 15, 2017
ஐப்பசி 29, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048

**பகுதி II – பிரிவு 2**

## தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொதுமக்களில் ஒரு பிரிவினரின் நலனுக்கான அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்

### அரசின் அறிவிக்கைகள்

### வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை

### தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் சட்டம், 2017 –ன் கீழ் அறிவிக்கைகள்

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017 ன் கீழ் மொத்தத் தொகை 1.5 கோடி ரூபாய் வரை கொண்டுள்ள பதிவுபெற்ற நபர்கள் மாதாந்திர நமூனா தாக்கல் செய்வதற்கான வழிமுறைகள்
*[அ.ஆ.நிலை எண். 165 வணிகவரிகள் மற்றும் பதிவு (ஆ1), 15 நவம்பர் 2017
ஐப்பசி 29, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு - 2048]*

**எண். II(2)/வவப/935(ஆ–1)2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல்) பிரிவு 148ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, தமிழ்நாடு ஆளுநரால், குழுவின் பரிந்துரையின்படி, பதிவு பெற்ற நபரின் மொத்தத் தொகை முந்தைய நிதி ஆண்டிலோ அல்லது நடப்பு நிதி ஆண்டிலோ ரூபாய் ஒரு கோடியே ஐம்பது லட்சம் வரை உள்ள, சரக்குகள் மற்றும் சேவைகள் அல்லது இரண்டிலும் வெளிவழங்கல்களின் விவரங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள சிறப்பு நடைமுறைகளை பின்பற்றும் வகையை சார்ந்த பதிவுப் பெற்ற நபர் அளிக்க வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

2. அந்த அட்டவணை நிரல் (3)ல் தொடர்புடைய பதிவுகளில் குறிப்பிட்ட காலஅளவு வரை கீழ் உள்ள அட்டவணை நிரல் (2)ல் குறிப்பிடப்பட்ட காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் அல்லது இரண்டிற்குமான வெளிவழங்கல் விவரங்களை படிவம் ஜிஎஸ்டிஆர்–1 ல் அந்த நபரால் கொடுக்கப்பட வேண்டும்.

அட்டவணை

| வ. எண் | படிவம் ஜிஎஸ்டிஆர் 1–ல் எந்த காலாண்டிற்கான விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது | படிவம் ஜிஎஸ்டிஆர்–1ல் விவரங்கள் அளிப்பதற்கான காலஅளவு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | ஜுலை – செப்டம்பர், 2017 | 31 டிசம்பர், 2017 |
| 2. | அக்டோபர் –டிசம்பர் 2017 | 15 பிப்ரவரி, 2018 |
| 3. | ஜனவரி –மார்ச், 2018 | 30 ஏப்ரல், 2018 |

3. சட்டத்தின் பிரிவு 38–ன் உட்பிரிவு (2)ன் மற்றும் பிரிவு 39 –ன் உட்பிரிவு (1) ன் கீழ் அல்லது ஜுலை 2017 முதல் மார்ச் 2018 வரையிலான சிறப்பு நடைமுறை நமூனா அல்லது விவரங்கள் அளிப்பதற்கான காலவரம்பு நீட்டிப்பு, நேர்விற்கேற்ப, அலுவல் சார்ந்த அரசிதழில் பின்னர் அறிவிக்கை செய்யப்படும்.

சட்டப்பிரிவு 47ன் கீழ் செலுத்த வேண்டி தாமதக் கட்டணம் கைவிடுவது

*[அ.ஆ.நிலை. எண். 166 வணிகவரிகள் மற்றும் பதிவு (ஆ1), 15 நவம்பர் 2017*
*ஐப்பசி 29, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/வவப/935(ஆ–2)2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017–ன் (தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல்) (இதன் பிறகு இந்த அறிவிக்கையில் கூறப்பட்ட சட்டம் என குறிப்பிடப்படும்) பிரிவு 128ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, தமிழ்நாடு ஆளுநரால், குழுவின் பரிந்துரையின்படி, கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 47–ன் கீழ் 2017 அக்டோபர் மாதம் முதல் நமூனா படிவம் ஜிஎஸ்டிஆர் 3பியை உரிய தேதியில் அளிக்க தவறினால், அத்தவறுகள் தொடர்ந்தால், எந்த பதிவு பெற்ற நபராலும் செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாய்க்கு கூடுதலான தொகை இதன் மூலம் கைவிடப்படுகிறது.

இருப்பினும் கூறப்பட்ட நமூனாவில் செலுத்தப்பட வேண்டிய மாநில வரியின் மொத்த தொகையானது ஒன்றுமில்லை எனும் போது அத்தகைய பதிவு பெற்ற நபர் அளிக்க வேண்டிய 2017, அக்டோபர் மாதத்திற்குரிய நமூனாவை உரிய தேதியில் அளிக்க தவறியதற்காக கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 47ன் கீழ், செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணமானது ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாய்க்கு கூடுதலான தொகை இதன் மூலம் கைவிடப்படுகிறது

இந்த சட்டத்தின்கீழ் மின்னனு வர்த்தக செயல்பாட்டாளர் மூலமான வழங்கல்களுக்கு பதிவு பெறுவதிலிருந்து விலக்களித்தல்

*[அ.ஆ.நிலை. எண். 167 வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 15 நவம்பர் 2017*
*ஐப்பசி 29, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண்.II (2)/வவப/935(ஆ–3)2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல்) (இதன் பிறகு இந்த அறிவிக்கையில் கூறப்பட்ட சட்டம் என குறிப்பிடப்படும்) ன் பிரிவு 23ன் உட்பிரிவு (2)ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, தமிழ்நாடு ஆளுநரால், குழுவின் பரிந்துரையின்படி கூறப்பட்ட சட்டத்தின் கீழ் பதிவு பெறுவதிலுருந்து விலக்களிக்கப்பட்ட வகையை சார்ந்த நபர்களின் அகில இந்திய அளவில் கணக்கிடப்படும் மொத்தத்தொகை, ஒரு நிதியாண்டில் ரூபாய் இருபது இலட்சத்திற்கு மிகாமல் இருந்து, மேலும் கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 52ன் கீழ், ஆதாரத்தின் மீது வரி வசூல் செய்ய தேவைப்படுகிற, மின்னனு வர்த்தக செயல்பாட்டாளர் மூலமாக செய்யப்படும், கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 9 உட்பிரிவு (5)ன் குறிப்பிடப்பட்ட வழங்கல் தவிர, சேவைகளை வழங்குவதை செய்யும் நபர்கள் இதன்மூலம் குறிப்பிடப் படுகிறார்கள்.

இருப்பினும், ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் தவிர, அரசமைப்பு 279அ–ன், கூறு (4) ன் உட்கூறு (எ)ல் குறிப்பிட்டுள்ளபடி "சிறப்பு வகை மாநிலங்கள் பொருத்தவரையில் அகில இந்திய அளவில் கணக்கிடப்படும் அத்தகைய வழங்கல்களின் மொத்த மதிப்பு ரூபாய் பத்து லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இந்த சட்டத்தின் கீழ் விலைப்பட்டியல் வழங்கும் நேரத்தில் செலுத்திய வரி

*[அ.ஆ.நிலை எண். 168 வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 15 நவம்பர் 2017*
*ஐப்பசி 29, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/சிடிஆர்/935(ஆ–4)2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல்) (இதன் பிறகு இந்த அறிவிக்கையில் கூறப்பட்ட சட்டம் என குறிப்பிடப்படும்) ன் பிரிவு 148ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, 2017, அக்டோபர் 13ந் தேதியிட்ட தமிழ்நாடு அரசின் அரசிதழ் அசாதாரமானதின் பகுதி II, பிரிவு 2–ன் பக்கம்–2ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண். II (2)/ வவப/858(அ–3)/2017–ஐ, தள்ளி வைத்து அத்தகைய தள்ளி வைப்புக்கு முன் முடிக்கப்பட்ட அல்லது முடிக்காமல் விடுப்பட்ட தொடர்புடைய செயல்கள் தவிர்த்து, குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு ஆளுநரால், கூறப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு அத்தகைய வகையை சேர்ந்த பதிவு பெற்ற நபர்களால் செலுத்தப்பட வேண்டிய வரிக்கான குறிப்பிடப்பட்ட காலம் மற்றும் கூறப்பட்ட சட்டம் மற்றும் அதன் கீழான விதிகளின் அத்தியாயம்-IX ல் குறிப்பிடப்பட்டவாறு நமூனாக்கள் மற்றும் விவரங்களை அவ்வாறே அளிக்க வேண்டும் மற்றும் கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 14 ன் விதிமுறைகளை ஈர்க்கும் சூழ்நிலைகள் உட்பட, கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 12 ன் உட்பிரிவு (2) ன் கூறு (அ) ல் குறிப்பிடப்பட்டவாறு சரக்குகள் வழங்கும் நேரத்தில், சரக்குகளின் வெளி வழங்கல் மீதான மாநில வரியினை

செலுத்தும் அந்த வகையை சாா்ந்த நபா்கள் என கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 10 ன் கீழ் இணக்க வரி விதிப்பிற்கு விருப்பம் தெரிவிக்காத அந்த பதிவு பெற்ற நபா்களை இதன் மூலம் அறிவிக்கிறாா்.

சட்டத்தின் கீழ் படிவம் ஜிஎஸ்டிஆா் 4 தாக்கல் செய்வதற்கான காலவரம்பு நீட்டிப்பில் திருத்தங்கள்

*[அ.ஆ.நிலை எண். 169 வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 15 நவம்பா் 2017*
*ஐப்பசி 29, ஹேவிளம்பி, திருவள்ளுவா் ஆண்டு – 2048]*

**எண். II(2)/வவப/935(ஆ–5)2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல்) ன் பிரிவு 39ன் உட்பிரிவு (6)ல் பிரிவு 168ல் படிக்கப்பட்ட படி அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி மாநிலவரி ஆணையரால் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் 10/2017 (ஆா்சி.085/2016/வரிவிதிப்பு/அ1) 2017 அக்டோபா் 13ந் தேதியிட்ட அறிவிக்கையில் பின்தொடரும் திருத்தங்கள் தமிழ்நாடு ஆளுநரால் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது, அதாவது,

அந்த அறிவிக்கையில் வாா்த்தைகள், எண்கள் மற்றும் எழுத்துகள் “15ந் தேதி நவம்பா் 2017’’ க்கு பதிலாக வாா்த்தைகள் எண்கள் மற்றும் எழுத்துகள் “24ந் தேதி டிசம்பா் 2017’’ என மாற்றீடு செய்யப்படுகிறது.

முனைவா்.ச.சந்திரமௌலி,
அரசின் கூடுதல் தலைமை செயலாளா் (முகூபொ).